[மாண்புமிகு திரு. சி. பொன்னையன்] [1987 ஏப்ரல் 28

என்று ஆகிவிடும் என்ற காரணத்தால், அதற்கு மாறாக mostl settlement out of Court என இதைக் கணக்கில் எடுக்கவேண்டு மென்றும், இருதரப்பினருடைய இசைவைப் பெற்று வழக்கு களைத் தீர்ப்பதில்தான் வெற்றி அதிகமாக இருக்கிறது என்பதை கருத்தில் கொண்டுதான் உச்ச நீதிமன்றமும், பல உயர்நீதி மன்றங் களும் மத்திய அரசுக்கு கருத்தைக் கூறி, மாநில அரசுகள் அதை ஏற்று நடைமுறைப்படுத்துகின்றன.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீதிமன்றங்கள் பெண்கள் வழக்கு களை விசாரிக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பெண்கள் வழக்குகள் என்றால், வரதட்சணை போன்ற அந்த வழக்குகளையா அல்லது மாமியார் மருமகள் தகராறில் தீ வைத்து, கொளுத்திக் கொள்கிறார்களே, அதுபோன்ற வழக்கு களையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் சம்பந்தப்பட்ட குடும்பத் தகராறு வழக்குகளை இதில் முன்னுரிமை கொடுத்து விசாரிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. வரதட்சணை, கற்பழிப்பு போன்ற கொடிய வழக்குகள் சம்பந்தப்பட்டவை பொறுத்தவரைக்கும், தனியாக, பெண்களுக்காக,—பேமிலி கோர்ட்ஸ்—குடும்ப நீதி மன்றங்கள் என்று அனைத்து மாவட்ட அளவிலேயும் கொண்டுவர அரசு முடிவு எடுத்து இருக்கிறது.

அண்ணா மாவட்டம், திண்டுக்கல் தலைமை குற்ற விசாரணை நீதிமன்றம்

526—(*வினா எண். 12319) திரு. ஆ. பிரேம்குமார்: மாண்பு மிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம் திண்டுக்கல்லில் Chief Judicial Magistrate Court அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

1987 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டம், திண்டுக்கல்லில் தலைமை குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டம் திண்டுக்கல்லில் டிஸ்டிரிக்ட் கோர்ட் வந்து ஏறத்தாழ 3 ஆண்டுகள் ஆகின்றன. சீப் ஜுடிஷியல் கோர்ட்டை இந்த ஆண்டிற்குள் ஆரம்பிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்தினுடைய செயற்குறிப்பைப் பெற்று விரைவில் இதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டம், திண்டுக்கல்லில் இருக்கக்கூடிய மாவட்ட நீதிமன்றத்திற்கு 'அப்பீல் ஜுரிஸ்டிக்ஷன்' என்று சொல்லக்கூடியது நத்தம், நிலக்கோட்டை மற்றும் கொடைக்கானல் ஆகிய பகுதிகளில் இருக்கக்கூடிய வழக்குகளுடைய 'அப்பீல் ஜுரிஸ்டிக்ஷன்' திண்டுக்கல்லில் இருந்தும், மதுரையிலேதான் இன்னும் அந்த வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையை மாற்றி அதை அண்ணா மாவட்டம் திண்டுக்கல்லில் விசாரிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்திடமிருந்து இதற்கான செயற்குறிப்பு கோரப்பட்டிருக்கிறது. அது வந்தவுடன் விரைவில் இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி பிள்ளையார் நத்தத்திலிருந்து திண்டுக்கல் கோர்ட்டுக்குச் செல்லவேண்டுமென்றால் 80 கிலோ மீட்டர் செல்லவேண்டும்; மதுரைக்குச் செல்லவேண்டுமென்றாலும் 80 கிலோ மீட்டர் செல்லவேண்டும்; மேலூர் செல்ல

வேண்டுமென்றாலும் 80 கிலோ மீட்டர் தூரம் செல்லவேண்டியுள்ளது. நத்தம் தனியாக தாலுக்காவாகப் பிரிக்கப்பட்டு பல வருடங்கள் ஆகின்றன. நான் அமைச்சர் அவர்களிடத்திலே பலமுறை நத்தம் பகுதிக்கு நீதி மன்றம், முன்சீப் கோர்ட் வேண்டுமென்று கோரியிருக்கிறேன். அதை இந்த ஆண்டாவது நடைமுறைக்குக் கொண்டு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு உரிமையியல் நீதிமன்றம் என்ற முறையிலே அமைக்க வேண்டுமென்று அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு ஆய்ந்து வருகிறது. உயர்நீதி மன்றத்தினுடைய செயற்குறிப்பை அரசு கோரியிருக்கிறது. வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனியில் தற்போது சப்-மேஜிஸ்டிரேட் கோர்ட் ஒன்றும், முன்சீப் கோர்ட் ஒன்றும் மட்டுமே இருக்கின்றது. அங்கே முதல் வகுப்பு நீதிமன்றம் அல்லது எஸ்.டி.எம். கோர்ட் ஆரம்பிக்க வேண்டுமென்று நீண்டநாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. சென்ற ஆண்டே இதை ஆரம்பிக்கவேண்டிய கட்டத்திற்கு வந்து நின்று விட்டது. எனவே அண்ணா மாவட்டம், திண்டுக்கல்லில் சி.ஜே.எம். கோர்ட் வந்தவுடன் அங்கே இருக்கும் எஸ்.டி.எம். கோர்ட்டையோ அல்லது முதல் வகுப்பு மேஜிஸ்டிரேட் கோர்ட்டையோ பழனியில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த கோரிக்கை உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. உயர்நீதிமன்றம் அதற்கு பரிந்துரை செய்திருக்கிறது. அரசு அது குறித்து விரைவில் நடவடிக்கை எடுக்கும்.